IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 107/2018

Deposition of Witness : DW 1

Name : மோகன் (வயது – 52)

Father's Name /W/o : த/பெ வெள்ளைக்கண்ணு

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : ஓச்சலம்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 20.11.2025.

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. நான் என் பிரமாண வாக்குமூலத்தில் 10.11.1997 தேதியில் வாங்கிய சொத்தில் மூன்று பேர் வீடு கட்டியுள்ளீர்களா என்றால் நான் மட்டும் தான் வீடு கட்டியுள்ளேன். மேற்படி சொத்தில் மூன்று பேரும் வசிக்கிறோம் என்று நான் சொல்வது தவறு என்றால் அவர்கள் தனியாக வசித்து வருகிறார்கள் நான் மட்டும அங்கு வசித்து வருகிறேன். நான் அளந்த பின்பு எல்லைகல்லை நான் பிடுங்கி விட்டேன் என்றாலும் அதனால் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

2. வாதியின் மனைவியிடம் சொத்து வேண்டுமா அல்லது பிள்ளை வேண்டுமா என்று மிரட்டினேன் என்றாலும் அதனால் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொத்து வாங்கிய பிறகு தான் வாதியின் தந்தை 2001 ஆம் ஆண்டில் சொத்து வாங்கினார் என்றால் சரிதான். வாதியின் தந்தை 30.07.2011 தேதியில் தன் 3 பிள்ளைகளுக்கு தான செட்டில்மெண்ட எழுதி

வைத்த விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

3. நான் 11.09.2018 தேதியில் வாதியின் சொத்தில் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்ததால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் ஆணையர் வழக்கு சொத்தை அளக்கும் போது கிராம நிர்வாக அலுவலர் இல்லை என்று நான் சொன்னது பொய் என்றால் சரியல்ல. என் ஆவணங்கள் மற்றும் வேணுகோபால் மகன்கள் ஆவணங்களை பரிசீலனை செய்த பிறகு தான் சர்வேயர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் என் ஆவணம் வாங்கவில்லை.

4. மேற்படி அளவீடு செய்யும்போது என் ஆவணங்களை கேட்டார்கள் என்றாலும் நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் ஆவணம் கேட்கவில்லை. நான் வழக்கறிஞர் அறிக்கைக்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளேன் என்றால் தெரியாது. மேற்படி நான் சொல்வது பொய் என்றாலும் எனக்கு வழக்கு பற்றி அனைத்து விபரங்களும் தெரிந்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. நான் வழக்கு சொத்து இருக்கும் ஊரில் தான் பிறந்து வளர்ந்தேனா என்றால் ஆம். எனக்கு பூர்வீகம் அதே ஊரா என்றால் இல்லை. எனக்கு பங்காளிகள் யாரும் இல்லையா என்றால் ஆம். எனக்கு பணபலம் உள்ளது என்றாலும் அதை வைத்து தான் வாதி இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆக்கிரமிப்பு செய்ததை வழக்கறிஞர் ஆணையர் தெரியவரும் என்றாலும் கிராம நிர்வாக அலுவலர் வரவில்லை என்று நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பில் தெரிவித்துள்ள ஆக்கிரமிப்பு விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரிய படி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**(வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**